**ஏறாவூர்பற்று பிரதேச சபை**
**மட்டக்களப்பு மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 மே 15 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 ஆம் ஆண்டு மே 08 ஆந் திகதி தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 இல் பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றிலினையும் இலங்கை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டுக்குறிய நிதிக்கூற்றுக்கள் 31 மார்ச் 2019 இற்கு முன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் தாமதமாக 15 மே 2019 இல் 45 நாட்களின் பின் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | உரிய தினத்திற்கு முன் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்க வேண்டும். | எதிர்காலத்தில் அனுப்பி வைக்கப்படும். |

1.3.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

1.3.2 கணக்கீட்டு கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் | பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | எதிர் காலத்தில் அனுப்பி வைக்கப்படும். |

நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.3.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| அ. சபையில் பொறியியந்திரங்களும், வாகனங்களும் மொத்தமாக 41 காணப்படுகின்ற போதிலும் அவை ஒவ்வொன்றினதும் பெறுமதி விலைமதிப்பீட்டு திணைக்களத்தில் மதிப்பீடு செய்யப்பட்டு இறுதிக் கணக்கிற்கு கொண்டுவரப்படாது அவற்றின் மொத்த பெறுமதி ரூபா 12,534,720 மட்டுமே வெளிப்படுத்தப்பட்டுள்ளது | சொத்துக்களின் சரியான பெறுமதி இறுதிக் கணக்கிற்கு கொண்டு வரப்பட வேண்டும். | விலை மதிப்பீட்டு திணைக்களத்தில் மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |
| ஆ. காணி கட்டிடங்கள் விலை மதிப்பீட்டு திணைக்களத்தினால் பட்டியல் படுத்தப்பட்டு பெறுமதி மதிக்கப்பட்டு இறுதிக் கணக்கிற்கு கொண்டுவரப்படவில்லை. | சரியான பெறுமதி இறுதிக் கணக்கிற்கு கொண்டு வரப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. |
| இ. வாசகர்களால் மீள ஒப்படைக்கப்படாத ரூபா 102,270 பெறுமதியுடைய 800 புத்தகங்களும் பெறுமதி மதிக்கப்பட்டு இறுதி புத்தக இருப்பில் இருந்து கழிக்கப்படாது சொத்தாக காட்டப்பட்டு வருகின்றது. | பதிவளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| ஈ. பெறவேண்டிய முத்திரை தீர்வை ரூபா 5,521,950 இறுதிக் கணக்கில் வெளிப்படுத்தப்படவில்லை. | சரியான தொகை இறுதிக் கணக்கில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்பட்டது. நடவடிக்கை எடுக்கப்படும். |
| உ. பெறவேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 174,125 இறுதிக் கணக்கில் வெளிப்படுத்தப்படவில்லை. | சரியான தொகை இறுதிக் கணக்கில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்பட்டது. நடவடிக்கை எடுக்கப்படும். |
| ஊ. UNOPS நிறுவனத்திடமிருந்து 2017ம் ஆண்டு நன்கொடையாக பெறப்பட்ட AE 8132 இலக்க மொன்டிரு வாகனம் பெறுமதி மதிப்பிடப்பட்டு | சொத்துக்களின் சரியான பெறுமதி இறுதிக் கணக்கிற்கு கொண்டு வரப்பட வேண்டும். | மீளாய்வாண்டில் நடவடிக்கை எடுக்கப்படும். |

| | |
|---|---|
| நிதிக்கூற்றுக்களில் கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. இதனால் தேறிய சொத்து இத் தொகையினால் குறைத்து காட்டப்பட்டுள்ளது. | |
| எ. ரூபா 276 மில்லியன் பெறுமதியுடைய திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையம் 2017 ஏப்ரல் UNOPS நிறுவனத்தினால் சபையிடம் கையளிக்கப்பட்டுள்ள போதிலும் இச் சொத்து நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை. | சொத்துக்களின் சரியான பெறுமதி இறுதிக் கணக்கிற்கு கொண்டு வரப்பட வேண்டும். | எதிர் காலத்தில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| ஏ. JICA திட்டத்தின் மூலம் ரூபா 40 மில்லியன் பெறுமதியுடைய கிராமிய நீர் விநியோகத் திட்டம் பூரணப்படுத்தப்பட்டு மே மாதம் 2015 இல் சபைக்கு கையளிக்கப்பட்டுள்ள போதிலும் இச் சொத்து நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை. | சொத்துக்களின் சரியான பெறுமதி இறுதிக் கணக்கிற்கு கொண்டு வரப்பட வேண்டும். | எதிர் காலத்தில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும். |

1.4 இணக்கமின்மைகள்

1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள். | | | |
| (i)_அத்தியாயம் III இன் பிரிவு 81 | காணி உரிமைமாற்றல் சம்பந்தமான முத்திரைத் தீர்வைகளை மீளளிப்புச் செய்யக்கோரும் விண்ணப்பங்கள் பதிவாளர் நாயகத்திற்கும், ஏனைய கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான தீர்வைகளை மீளளிப்புச்செய்யக்கோரும் விண்ணப்பங்கள் பொதுத் திறைசேரியின் | இதன் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | பணிப்பாளருக்கும், தண்டப்பணங்களை மீளளிப்புச் செய்யக்கோரும் விண்ணப்பங்கள் நீதிமன்றங்களின் பதிவாளருக்கும் ஒவ்வொரு காலாண்டு இறுதியிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | | |
| (ii) அத்தியாயம் III இன் பிரிவு 59 | வியாபார வரிகள் தொடர்பாக ஒவ்வொரு ஆண்டு ஆரம்பத்திலும் சபையின் எல்லைக்குள் கணிப்பீடு மேற்கொண்டு, அதற்கு அமைய வியாபார வரிகள் பற்றிய நிரல் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வரிகள் பற்றிய நிரல் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர் காலத்தில் தயாரிக்கப்படும். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | | |
| (i) நிதிப்பிரமாணம் இல.571 | இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 641,548 தொகையான காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணங்களிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கொடுத்துத் தீர்ப்பதற்கு அல்லது வருமானத்திற்கு மாற்றுவதற;கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் பின்பற்றப்பட வேண்டும். | எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

2. நிதிசார் மீளாய்வு

2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை மிஞ்சிய வருமானம் ரூபா 33,302,965 ஆக இருந்ததுடன் அதற்கு எதிரான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவீனத்தை மிஞ்சிய வருமானம் ரூபா 20,284,742 தொகையாக இருந்தமை நிதிவிளைவுகளில் ரூபா 13,018,223 முன்னேற்றத்தை காட்டுகின்றது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான கணக்காய்வின் அவதானிப்பின் போது நிலுவைத் தொகை 1993 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 9,968,140 அறவிடாமல் நிலுவையாக காணப்படுகின்றது.

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வருட ஆரம்பத்தில் அறவிட வேண்டிய நிலுவை வருமானம் ரூபா 7,039,879 தொகை காணப்பட்ட போதிலும் வருட இறுதியில் மேலும் அதிகரித்து காணப்படுகின்றது. | நிலுவைகள் முறையாக அறவிடப்பட வேண்டும். | எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.2.3 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ரூபா 85,000 மட்டுமே அறவிடப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு நிலுவை ரூபா 992,081 இவ்வாண்டும் அப்படியே காட்டப்பட்டுள்ளது. | நிலுவைகள் முறையாக அறவிடப்பட வேண்டும். | அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.2.4 வாடகைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ரூபா 10,142,300 மட்டுமே அறவிடப்பட்டுள்ள போதிலும் நிலுவையாக ரூபா 3,047,521 காட்டப்பட்டுள்ளது. | நிலுவைகள் முறையாக அறவிடப்பட வேண்டும். | அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். |

2.2.5 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ரூபா 2,786,516 தொகை அறவிடப்பட்டுள்ள போதிலும் நிலுவை எதுவும் காட்டப்படவில்லை. | நிலுவைகள் முறையாக வெளிப்படுத்தப்பட வேண்டும். | அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். |

2.2.6 ஏனைய வருமானம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஏனைய வருமானங்களாக ரூபா 77,173,140 பெறப்பட்டுள்ள போதிலும் நிலுவையாக ரூபா 5,928,536 தொகை காட்டப்பட்டுள்ளது. | நிலுவைகள் முறையாக அறவிடப்பட வேண்டும். | அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். |

2.2.7 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

(அ) நீதிமன்ற தண்டப்பணம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்தும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 174,125 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் ரூபா 5,521,950 தொகையான முத்திரைக்கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன. | பெறப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றல்

அ. திண்மக்கழிவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மட்டக்களப்பு மாவட்டத்தில் | பொருத்தமான | எதிர் காலத்தில் |

| | | |
|---|---|---|
| உள்ள 07 உள்ளூராட்சி மன்றங்களால் சேகரிக்கப்படும் உக்கக் கூடிய உக்காத திண்மக்கழிவுகளை சேகரித்து முகாமைத்துவம் செய்வதற்காக கொடுவாமடு எனும் இடத்தில் சுமார் 400 மில்லியன் செலவில் 50 ஏக்கர் நிலப்பரப்பில் ஏப்ரல் 2017 இல் UNOPS நிறுவனத்தினால் இந் நிலையம் அமைத்து ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது. இதன்படி 07 உள்ளூராட்சி மன்றங்களால் சேகரிக்கப்படும் உக்கக்கூடிய உக்காத கழிவுகளை இந் நிலையத்தில் சேகரிப்பதெனவும் ஒரு தொன்னுக்கு ரூபா 630 அறவிடுவதும் இணங்கப்பட்டது. இதன்படி பெரும்பாலான சபைகள் கழிவுகளைக் கொண்டு சென்றுள்ள போதிலும் சபை இதன் கட்டணத்தை படிப்படியாக ரூபா 1800 வரை அதிகரித்ததினால் உள்ளூராட்சி மன்றங்களால் அனுப்பப்படும் திண்மக்கழிவுகளும் படிப்படியாக குறைவடைந்து வருகின்றது. | கட்டணம் அறவிடப்பட வேண்டும். | கருத்தில் கொள்ளப்படும். |

ஆ. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் அமைப்பின் அங்கத்துவ நாடுகளின் அரச தலைவர்களின் தலைமையில் 2015 ஆம் ஆண்டு நிலைபேறான அபிவிருத்தி மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் சபையினால் 2030 ஆம் ஆண்டில் அடைந்து கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் தொடர்பாக அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் தொடர்பாக குறிகாட்டிகள் உருவாக்கப்பட வேண்டும். | எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கரடியனாறு குடிநீர் விநியோகத்திட்டம் | | |
| (அ)ஏறாவூர் பற்று பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கரடியனாறு எனும் இடத்தில், JICA கடன் உதவித்திட்டத்தின் மூலம் கிராமிய குடிநீர் வழங்கல் திட்டம் சுமார் 400 குடும்பங்களுக்கு குடி தண்ணீர் விநியோகிப்பதற்காக மூன்று ஒப்பந்த வேலைகளுக்காக (கட்டிட நிர்மான வேலை, மின் இணைப்பு பொறியியல் வேலை மற்றும் குழாய்கள் பதித்தல்) சுமார் ரூபா 40 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்டு மேலும் Paln Lanka தாபனத்திடமிருந்து ரூபா 1, 782,820 பெற்று வீடுகளுக்கு நீர் வழங்குவதற்காக செலவு செய்து 2015 ஆண்டு மே மாதம் தொடக்கம் ஏறாவூர் பற்று பிரதேச சபையினால் பராமரிக்கப்பட்டு வரும் நீர் விநியோகத் திட்டம் இன்றுவரை மக்களுக்கு சபையினால் நீர் விநியோகிக்கப்பட் டிருக்கவில்லை. | குடிநீர் வழங்க துரித கெதியில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. |
| (ஆ) சபையில் மீளாய்வாண்டில் நடைமுறைக் கணக்கை பேணி வரும் காசேட்டின் படி ரூபா 25 மில்லியன் தொடக்கம் ரூபா 30 மில்லியன் வரையான வீச்சில் காசு மீதி கையிருப்பாக காணப்பட்ட போதிலும் இதனை வினைத்திறனான வகையில் முதலீட்டு வருமானத்தை உழைக்க நடவடிக்கை எடுக்காததால் சபையானது சராசரியாக ரூபா 02 மில்லியன் தொகை வருமானத்தை இழந்துள்ளது. | சபை நிதி பொருத்தமான முறையில் கையாளப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | பொருத்தமான முதலீட்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். |

3.4 **மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அ. பதவி வெற்றிடங்கள் மற்றும் மிகைகள் | | |
| ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர்களை சேர்த்துக் கொள்ளும் போது பொது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அனுமதி பெறப்பட்டு உரிய நிதி ஓதிக்கீட்டுக்கான அங்கீகாரமும் பெறப்பட்ட பின்னரே ஊழியர்கள் அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் இதற்கு முரணாக முன் அனுமதியும் அங்கீகாரமும் பெறப்படாது 2015 இல் 116 ஊழியர்கள் அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர். இதனால் இப்போது 16 ஊழியர்கள் அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக்கு மேலதிகமாக காணப்படுகின்றது. | உத்தியோகத்தர்களை சேர்த்துக் கொள்ளப்படும் போது அரச நிர்வாகம் 25/2014 ம் இலக்க சுற்று நிருபம் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். | எதிர் காலத்தில் கருத்தில் கொள்ளப்படும். |
| ஆ. 05 வருடங்களுக்கு முன்னர் பதவியை விட்டுச் சென்ற ஓய்வு பெற்ற வேலையிலிருந்து நீங்கியுள்ள இடமாற்றங்களினால் சென்ற 07 ஊழியர்களிடம் இருந்து அறிவிட வேண்டிய ரூபா 583,445 கடன் தொகையை உரிய நபர்களிடமிருந்து அல்லது பிணையாளியிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ந்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது. | அறவிட துரித நடளவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

3.5.1 சொத்துக்களை பதிவேட்டில் உட்படுத்தாமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அ. சபையானது தனக்கு உரித்தான சகல காணி கட்டிடங்களை இனங்கண்டு அவற்றை அடையாளப்படுத்தி வைத்திருக்க உரிய நடவடிக்கையினை மீளாய்வாண்டு வரை எடுத்திருக்கவில்லை. | காணி கட்டிடங்கள் இனங் காணப்பட்டு பதியப்பட வேண்டும். | எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

3.5.2 வாகனங்களின் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அ. சபையில் காணப்படும் 22வாகனங்களுக்கு எரிபொருள் நுகர்ச்சி சம்மந்தமான அறிக்கை ஒரு வருடத்துக்கு மேலாக இயந்திரப் பொறியியலாரிடம் இருந்து பெறப்படடிருக்கவில்லை. ஏழு வாகனங்களுக்கு வாகன பதிவுப் புத்தகம் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள சட்டதிட்டங்களுக்கு அமைய பெறப்பட்டிருக்கவில்லை. | இயந்திரப் பொறியலாளரிடம் இருந்து எரிபொருள் நுகாச்சி சம்பந்தமான அறிக்கை பெறப்பட வேண்டும். | தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

3.6 இனம் காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அ. மீளாய்வாண்டில் தெரு மின் விளக்குகள் பொருத்துவதற்காக ரூபா 1,290,095 செலவிடப்பட்டுள்ளது. இதன் போது பெறுவனவுகள், வழங்கல்கள் நிதிப் பிரமாணம் 751(1) இற்கு அமைய ஏடுகளில் முறையாக பதியப்பட்டிருக்கவில்லை. | முறையாக பதிவேடுகள் வேணப்பட வேண்டும். | எதிர் காலத்தில் முறையான நடவடிக்கை எடுக்கப்படும். |

தேவையையும், பொதுமக்களின் கோரிக்கையும் கருத்தில் கொள்ளாது தேவைக்கு அதிகமாக கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

3.7 பெறுகை

3.7.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| அ.மீளாய்வாண்டுக்கான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டு அதன்படி பெறுவனவுகள் இடம் பெற்றிருக்கவில்லை. | பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர் காலத்தில் தயாரிக்கப்படும். |